# புதுடில்லியில் சாதுக்களின் சண்டித்தனம்


Phone No 4502 Regd. No. M. 5458

விலை ஒரு அணா இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (23—4—50) வெளியூர் (24—4—50) [ இதழ் 233


## சீர்திருத்தச் சட்டத்தை எதிர்க்க ஆண்டிகளின் அணிவகுப்பு

## ‘இந்து சட்டத்திருத்த மசோத ஒழிக’ என கூச்சலிட்டனர் கோவணாண்டிகள்

### காலித்தனம் செய்த கமண்டலதாரிகள் காவலில் வைக்கப்பட்டனர்!

“நூற்றுக்கு மேற்பட்ட சாமியார்கள் காவி உடை உடுத்தி, திருநீறு பூசிய மேனியராய் கையில் கொடிகளுடன், புதுடில்லியில் இந்து சட்ட திருத்த மசோதா பற்றிய மாநாடு கூடும் அரசாங்க மாளிகை முன் கூடி நின்று “இந்து சட்ட திருத்தமசோதா ஒழிக” என்ற ஒலிகளை எழுப்பினர். போலீசார் இவர்களை லாரிகளில் ஏற்றிச் சென்று, பாராளும் மன்ற போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைத்தனர். பாராளும் மன்றத்துக்குச் செல்லும் பாதைகளில், போலீஸ் காவல் நிறுத்தப்பட்டிருக்கிறது”

இது, இருபதாம் நூற்றாண்டில், விடுதலை பெற்ற இந்தியாவின் தலைநகரிலிருந்து, கிடைத்திருக்கும் ஓர் விசித்திரமான செய்தி!

அவர்கள் கையிலே கத்தியோ, துப்பாக்கியோ இல்லை. உடலிலே போர் வீரர்கள் அணிந்திருக்கும் உடை இல்லை.

கையிலே கமண்டலம்! உடலிலே காவி உடை! நெற்றியிலே திருநீறு, சிலர் கோவணம் கூட அணிந்திருந்தனராம். இதுதான் அந்தப் படை வீரர்களின் திருக்கோலம்! இந்தக் கோலத்திலே காட்சி அளித்த இந்த விபூதி வீரர்களை அடக்க போலீஸ் உதவி நாடப்பட்டிருக்கிறது!

இவ்வளவு அமர்க்களம் எதற்கு: இந்து சட்டதிருத்த மசோதா என்னும் ஒரு அரைகுறை சீர்திருத்தப் பணிக்கு இத்துணை எதிர்ப்பு! எதிர்த்தவர்கள் சாதுக்கள்—சந்நியாசிகள்—முற்றுந்துறந்த புனிபுங்கவர்கள்—இவ்வுலக வாழ்வை வெறுத்து, அவ்வுலக வாழ்வுக்கு அருந்தவம் புரியவர்கள்.

இப்படிப் பட்டவர்களின் எதிர்ப்புக்கு அரசியலார்கூட அஞ்ச வேண்டியிருக்கிறது. போலீஸ் பாதுகாவல் தேட வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு லவதிகத்தின் வல்லாட்டம் வளர்ந்துள்ளது இந்த நாட்டிலே

சரியெனப்பட்ட சீர்திருத்தத்தை நிறைவேற்ற, போலீஸின் உதவி, அரசாங்கத்தின் ஆற்றல் முதலியன செலவழிக்கப்பட்டுள்ளது சீனாவிலே, துருக்கியிலே, ரஷியாவிலே. ஆனால் இந்த துர்ப்பாக்கியம் பிடித்த நாட்டிலே அரசியலாரின் ஆற்றல் வேடம் அணிந்த வீணர்களை—கோவணாண்டிகளை அடக்கப் பயன்படுத்த வேண்டிய பரிதாப நிலையில் உள்ளது.

சீர்திருத்தப்பணி செம்மையாக நடைபெறுமவரை, சீர்திருத்தக்காரர்கள் கைக்கு ஆட்சி முறை மாறும்வரை எந்த அரசியலும் சரிவர இயங்க முடியாது; இயங்கினாலும் உருப்படியான சட்டங்களை இயற்ற முடியாது என்று சீர்திருத்த இயக்கத்தினராகிய நாம் கடந்த கால் நூற்றாண்டாகக் கூறி வருகிறோம். நாம் கூறும் போதெல்லாம் நம்மீது சீறி விழுந்த அரசியல் வாதிகள் பலர் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு இன்று புதுடில்லியில் ஆண்டிகள் செய்யும் ஆட்ட

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

# இந்தியைக் கட்டாய பாடமாக திணித்துவிட்டார்கள்

## 10 வயதாகாத குழந்தையும் படிக்க வேண்டியதுதான்!

## அரிசி கொடுக்க மறுத்த அந்நியன் மொழிமேல் ஆசை ஏன்?

சென்னை, ஏப் 22—

[இந்தி ஆறுவது வகுப்பிலிருந்து (முதல் பாரம்) உயர்நிலைப்பள்ளிக் குழந்தைகளுக்குக்கட்டாய பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்று சென்னை மந்திரிசபை நேற்று முடிவு செய்துவிட்டதாம். மத்தரக் கல்வி ஆலோசனைக் குழுவின் சிபார்சின் பேரிலேயே இம்முடிவு இவ்வாண்டிலிருந்தே இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமாம் ]

பத்து வயதுகூட நிரம்பாத, தாய்மொழி மழலைகூடச் சரியாக மறக்காத குழந்தைகள் இப்புதிய திட்டத்தின்படி, மூன்று மொழிகள் கட்டாய பாடங்களாகக் கற்கவேண்டும். வரும் முதல் பாரத்திலிருந்து 6ம் பாரம் (பத்தாவது) வரை இந்திச் சனியன் விடாமல் பிடித்துக்கொள்ளும்.

முதல் பாரத்தில் இந்தி சிறிது சிறிதாகப் பேசக் கற்றுக்கொடுக்கப்படுமாம்; பின், இரண்டாவது பாரத்தில் எழுத்துக் கற்பிக்கப்படும்.

“தாய் மொழியோ, பிரதேச மொழியோ, இலக்கிய மொழியோ, அல்லது வேறு எந்த இந்திய மொழியையோ முதல் மொழியாக ஒரு மாணவன் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் போதனமொழி பிரதேசமொழியாக இருக்கும். இதிலும் சில இடங்களில் அரசாங்கம் இஷ்டப்படி சலுகையளிக்கலாம்.”

சென்னை மாகாணத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் 1948 லிருந்து மொழிக் கல்வியின் நிலையாவது; முதல் மொழி அல்லது பிரதேச மொழி (தமிழ், தெலுங்கு அல்லது வேறு எந்த மொழியாவது). இரண்டாவது மொழி சமஸ்கிருதம் அல்லது இந்தி அல்லது வேறு எந்த இந்தி மொழியாவது.

மூன்றாவது மொழியாக ஆங்கிலம் முதல் பாரத்திலிருந்து கற்கவேண்டும்.

**நான்கு மொழிகள் கற்கவேண்டும்**

இவ்வாண்டிலிருந்து போதனா மொழி பிரதேச மொழியாக இருக்கும். இதுவல்லாமல் ஒவ்வொரு மாணவனும் மூன்று மொழிகள் கற்கவேண்டும். முதல்மொழி, இது பிரதேச மொழியாக இல்லாமலும் இருக்கலாம். இரண்டாவது மொழி—இது கட்டாய பாடமாக இருக்கும் மூன்றாவது மொழி ஆங்கிலம் கட்டாய பாடமாகும்.

சமஸ்கிருதத்தை முதல் பாடமாக எடுத்துக்கொள்ளும் மாணவன், அதனுடன் பிரதேச மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் பயிலவேண்டும்!

## அரிசி வாங்கும்படி வற்புறுத்தப்பட்டது

### சென்னை சர்க்கார் அறிக்கை

“ஐக்கிய மாகாணம் அரிசிக்கு அதிக விலை கேட்பதைப் பற்றி மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, சென்னை அரசாங்கம் கேட்டுக் கொண்டும் மத்திய அரசாங்கம் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டது” என்று ஒரு பத்திரிகை அறிக்கையில் சென்னை சர்க்கார் அறிவிக்கிறது. சென்னையில் அரிசி விலை மணங்கு ரூ. 15 ஆக இருக்க ஐக்கியமாகாண அரிசி ரூ. 25 என்று வாங்க வேண்டுமென்று சென்னை அரசாங்கம் வற்புறுத்தப்பட்டது என்று அறிவிக்கிறது.

சென்னை மாகாணத்தில் உணவுப் பொருள் நிலை மிக நெருக்கடிய நிலைவிட்டதால், அதிக விலையானாலும் அரிசியை வேண்டாமென்று கூற முடியவில்லையென்றும் சென்னை சர்க்கார் கூறுகிறது.

# சுப்ரீம் கோர்ட்டில் - - - - மற்றும் ஒரு வழக்கு

—(0)—

## சென்னை சர்க்கார் தடை உத்திரவுக்கு எதிர்ப்பு

புதுடெல்லி, ஏப். 21—

“க்ராஸ்ரோட்ஸ்” என்னும் கம்யூனிஸ்டுக் கருத்துக்களடங்கிய பம்பாயிலிருந்து வெளியிடப்படும் ஆங்கில வார இதழ் ஆசிரியர், சென்னை அரசாங்கத்தின மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்குதொடர்ந்திருக்கிறார். அவ்விதழ், சென்னை மாகாணத்துக்குள் நுழையக்கூடாதென்றுசர்க்கார் உத்தரவிட்டிருப்பதே இவ் வழக்குக் காரணம்,

சென்னை பொதுஜனப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் மார்ச்சு முதல் தேதி இத்தடை உத்தரவு போடப்பட்டது

“க்ராஸ் ரோட்ஸ்” மீது தடை விதித்தது பேச்சுச் சுதந்திரத்துக்கும், எழுத்துச் சுதந்திரத்துக்கும் மீறியுள்ளதென்றும், அரசியல் திட்டத்தின்படி இத் தடை சட்டவிரோதமானதென்றும் வாதியின் தரப்பில் தோழர் பட்டாபிராமன் வாதித்தார்

சென்னை பொதுஜன பாதுகாப்பு சட்டமே செல்லாக்காசென்று அவர் சவால்விட்டார்.

எந்த மாகாணத்தின் பாதுகாப்பைக் குலைக்கக்கூடியவகையிலோ அல்லது சென்னை சர்க்காரைக் கவிழ்க்கக்கூடியவகையிலோ வாதி என்றும் எழுதவில்லை யென்று தோழர் பட்டாபிராமன் அறிவித்தார்.

சென்னை சர்க்காருக்காக வாதிடச் சென்ற அட்வகேட் ஜனரல் தோழர் ராஜா அய்யர் பேசுகையில், வாதி எதை எழுதினாலும், எவ்வாறு எழுதினாலும் சென்னை சர்க்காருக்குக் கவலை இல்லையென்றும், சென்னை மாகாணத்தில் அவர் கருத்து பரவக்கூடாதென்ற காரணத்தால்தான் தடைசெய்யப்பட்டதென்றும் அறிவித்தார்.

# எரிட்ரியாவில் சுதந்திர எழுச்சி

## கருப்பு நெருப்பாகிறது!

கெய்ரோ, ஏப். 22—

எரீட்ரியாவில் கலகம் முளைத்துக் கொண்டிருந்த போதிலும், ஐ. நா. கமிஷன் எல்லாதரப்பினரின் அபிப்பிராயத்தையும் அறிந்ததுடன், எல்லாப் பிரதேசங்களுக்கும்விஜயம் செய்து மக்கள் உண்மையில் கோருவதென்ன என்பதைக் கண்டறிந்திருக்கிறது.

கமிஷனைச் சேர்ந்த ஒரு முக்கிய அதிகாரி குளோப் நிருபரிடம் கூறியதாவது:—எரீட்ரியாவில் இரு பெரிய கட்சிகள் இருக்கின்றன ஒன்று யூனியனிஸ்ட் கட்சி மற்றொன்று எரீட்ரியா சுயேச்சைக் கட்சி. யூனியனிஸ்ட் கட்சி எதியோபியாவுடன், எவ்வித நிபந்தனையுமின்றி எரீட்ரியா சேரவேண்டும் என்று கோருகின்றனர். இதே கருத்தைதான் எதியோபியா அயல்நாட்டு மந்திரியும் கமிஷனிடம் தெரிவித்தார்.

### “உடனே சுதந்திரம் வேண்டும்”

7 அரசியல் ஸ்தாபனங்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட சுயேச்சைக் கட்சி எரீட்ரியா முழுவதற்கும் உடனே சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்றும், தர்மகாத்தப் பொறுப்பு ஏற்படவேண்டுமானால், ஐ. நா. விடமே அப்பொறுப்பு விடப்பட வேண்டும் என்றும் கோருகிறது.

கமிஷன், எதியோபியா மன்னர் ஹெயிலிஸெலாஸியையும் கண்டு பேசியது. எரீட்ரியாவின் பொதுஜன வாக்கெடுப்பு முடிவை ஏற்க எதியோபிய சர்க்கார் தயாராக இருக்கிறது.

ஏப்ரல் 28-ந் தேதி இக்கமிஷன் தன் ரிப்போர்ட்டைத் தயாரிக்க ஆரம்பிக்கும்.

# மே நாள் விழா !

*மே நாள் விழா !* மேதினி எங்கும் கொண்டாடப் பெறும் பெருவிழா! உழைப்பாளிகளுக்கு உணர்ச்சி ஊட்டும் உயரிய விழா !

அலைகடலையும், மலை முகட்டையும், அரசியல் எல்லையையும், சமுதாயப் பிரிவையும், நிறவேற்றுமையையும் தாண்டி, உலகத் தொழிலாளர் அனைவரும் ஒன்றுகூடி கொண்டாடும் விழா **மே நாள் விழா வாகும் !**

புது வாழ்வைக் கண்டோர்க்கும், புது வாழ்வைக் காண விரும்புவோர்க்கும், காணும் முயற்சியில் ஈடுபட்டோர்க்கும், மே நாள் விழா புது ஆற்றல் அளிக்கிறது—நிலைமையை வலுப்படுத்த போராட்டங்களில் வெற்றி பெற !

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையா? என்று பெருமூச்சுடன் கேட்டு, " இனிக் கொஞ்சும் உத்தேசமில்லை, புதியதோர் உலகைச் செய்தே தீருவோம்" என்ற போர் முழக்கத்துடன் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உழைப்பாளர்கள் உலகெங்கும் போராடுகின்றனர். தங்கள் உழைப்பைக் காட்டி உழைப்பின் பலனைக் காட்டி, உழைக்காதவர்களின் உல்லாச வாழ்வையும், உழைத்தோரின் உலுத்த வாழ்வையும் காட்டி, சமூக நீதி கேட்கின்றனர்; பொருளாதார வாழ்வு கேட்கின்றனர்; அரசியல் உரிமை கேட்கின்றனர்! அந்தக் கேள்விக் குறியை, ஆட்டிப் படைக்கும் ஆளும் வர்க்கத்தின் முன் நிலைநிறுத்தும் நாளே மே முதல் நாள்!

வாழ்வுக்கான வசதிகள் கேட்கின்றனர் தொழிலாளர்கள் - அவற்றைத் தர மறுக்கின்றனர் முதலாளிகள். தொழிலாளியும் - முதலாளியும் சந்திக்கமுடியாத வளவுக்கு வேற்றுமை வளர்ந்து, உலகெங்கும் இருபடை வரிசைகள் உண்டாகி, போராட்டம் நடைபெறுகிறது.

போராட்டங்கள் பல இடங்களிலே வெற்றியைத் தந்திருக்கின்றன - தராத இடங்களிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன; வெற்றி ஏற்படும் வரை நடைபெறுவதற்கான ஊக்கத்தை உழைப்போர் உலகுக்கு அளிக்கும் உறுதி நாளே மே நாள்!

1889-ல் பாரிசில் கூடிய இரண்டாவது சர்வ தேசீய தொழிலாளர் காங்கிரஸில்தான் மே நாள் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படிதான், மே முதல் நாள், தொழிலாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, பாட்டாளி மக்களை ஒன்று சேர்க்கும் நாளாக மாறியது. அதுமுதல்; மே விழா மேதினி எங்கும் கொண்டாடப் பெறுகிறது !

**மே நாள் உரிமைக்குப் போராடுவதற்குரிய சீரிய நாள் !**

அந்தச் சீரிய நாளைக் கொண்டாட வேண்டிய பொறுப்பு தொழிலாளரின் நலத்திலே நாட்டங்கொண்டு, அவர்களின் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெரும் பங்கு சார்கிறது. உழைப்பாளர்களாலேயே உருவாக்கப்பட்டு, அவர்களையே கொண்டு. அவர்களின் நல்வாழ்வுக்காக பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீங்காக் கடமையுமாகும்—மே விழா கொண்டாடுவது என்பது !

**சக்திக்கேற்ற உழைப்பு - தேவைக்கேற்ற வசதி** என்ற நிலையைக் காண போராடிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், மே நாளில் அந்த முழக்கத்தை நாடெங்கும் முழங்கச் செய்யுமாக !

சிதறிக் கிடக்கும் பல்வேறு வகைத் தொழிலாளர்களை ஒன்று படுத்தல், அவர்களின் இன்றைய நிலைமை உணர்த்துதல், அடைய வேண்டிய நிலையை அறிவித்தல், அவர்களைத் தெளிவடையச் செய்தல், உரிமைப் போராட்டத்துக்குத் தயாராக்குதல், இவைகளைச் செய்ய, பொதுக் கூட்டம் கூட்டுதல், ஊர்வலம் நடத்துதல், கழகக் கொடியேற்றி இலட்சிய விளக்கம் செய்தல், துண்டு வெளியீடுகள் மூலம் மே நாள் சிறப்பை எடுத்துரைத்தல் போன்ற செயல்களில் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள் ஈடுபட்டு, மே நாள் விழாவைக் கொண்டாட வேண்டுகிறோம்.

**இரா. நெடுஞ்செழியன்**
செயலாளர் - பிரசாரக் குழு
தி. மு. கழகம்

## இந்து சட்டத்திருத்த மசோதா மாநாடு

### அம்பேத்கார் தலைமையில் கூடிற்று

புதுடில்லி, ஏப். 22—

இந்து சட்டத் திருத்த மசோதா மாநாடு, சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் தலைமையில் நேற்று புதுடில்லியில் நடந்தது.

விவாக ரத்து, பலதாரத் தடை, பெண்களுக்குச் சொத்துரிமை போன்ற முக்கிய மசோதாவின் பகுதிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மேலும் இரண்டு நாட்களுக்கு மாநாடு நடக்குமென்று கருதப்படுகிறது. இந்த சட்டத்திருத்தமசோதாவைப் பற்றிப் பலருடைய கருத்துகளை அறியவே இம்மாநாடு கூட்டப்பட்டது.

மாநாடு ஆரம்பத்தில் தோழர் அம்பேத்கார் பேசுகையில், பலருடைய கருத்துகளும் அறிந்து ஆவன செய்யப்படுமென்று கூறினார்.

கருத்தறிவித்தவர்களில் இரண்டு பேர் சமஸ்கிருதத்தில் பேசினார்களாம்!

## ஆராய்ச்சியில் ஈடுபட மாணவருக்கு உதவி

### 200 பேருக்கு உபகாரச் சம்பளம்

மத்திய கல்வி மந்திரி சபையின் விஞ்ஞான ஆள்பலக் கமிட்டி செய்துள்ள சிபார்சுகளை அனுசரித்து, சர்வகலாசாலைகளிலும் இதர கல்வித்துறை ஆராய்ச்சி நிலையங்களிலுமாக 50 முதல்நிலை ஸீனியர் மாணவப் பதவிகளையும் 100 இளநிலை ஜூனியர் மாணவப் பதவிகளையும் இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்தகவலை ஏப்ரல் 18-ந் தேதியன்று தோழர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் பார்லிமெண்டில் தோழர் வி. சி கேசவராவ் கேட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஆராய்ச்சி மாணவப் பதவித் திட்டம் பற்றிய மின்னும் பல தகவல்கள் கல்வி மந்திரி பார்லிமெண்டில் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. தகுதியும் நாட்டமும் வாய்ந்த மாணவர்கள் விஞ்ஞான தொழில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கும், அப்பயிற்சி மூலம் கிடைக்கும் அறிவு, அனுபவங்களின் பலனாக ஆராய்ச்சித் துறைகளில் பொறுப்பு வகிப்பதற்கும் வாய்ப்பளிப்பதுதான் இத்திட்டத்தின் அலட்சியம்.

இத்திட்டத்தில், மூன்று ஆண்டு காலம் உதவியளிக்கப்படக் கூடிய இருவிதமான மாணவப் பதவிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; முதல்நிலை ஸீனியர் மாணவப் பதவிக்கு மாதமொன்றுக்கு 200 ரூபாய் உபகாரச் சம்பளம்; இளநிலை ஜூனியர் மாணவப் பதவிக்கு மாதமொன்றுக்கு 100 ரூபாய் உபகாரச் சம்பளம்.

முதல்நிலை மாணவப் பதவிகள் அடிப்படை விஞ்ஞானத் துறைகளில் உயர்தர ஆராய்ச்சி செய்வதற்கும், எஞ்சினியரிங் தொழில் நுட்பத் துறைகளில் பட்டப் பிற்கால ஆராய்ச்சிப் படிப்புக்கும் கொடுக்கப்படும். விஞ்ஞான பாடங்களில் எம். ஏ. பட்டம் பெற்றவர்களும், எஞ்சினியரிங், தொழில் நுட்பத் துறைகளில் சரியான பட்டமோ உயர்தர யோக்கியதா பத்திரமோ பெற்றிருப்பவர்களும் இவை பெறத் தகுதியுள்ளவர்கள்.

இளநிலை மாணவப் பதவிகள் பட்ட பிற்காலப் பயிற்சித்தாமுன்னதால், முந்தியதைவிடக் குறைந்த ரீதியான ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்காகக் கொடுக்கப்படும், சாதாரணமாய் இப்பதவிகள் விஞ்ஞானத் துறையில் சிறந்த ஆனர்ஸ் பட்டமாவது, தொழில் நுட்பத்துறைப் பட்டமாவது பெற்றிருப்பவர்களுக்கு வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட நிலையங்களின் அதிபர்கள் திறமை அடிப்படையைக் கண்டிப்பாகக் கவனித்தேதான், இந்திய சர்க்காரின் அங்கீகாரத்துக்குட்பட்டு மேற்படி பதவிகளை வழங்க வேண்டுமென்று இப்பரிசுகளை வழங்குவது சம்பந்தமான சாத்து நிபந்தனைகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாணவப் பதவி சம்பந்தமான மானியங்கள் நால் வருஷத் தவணைகளாக சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு முன்கூட்டியே கொடுக்கப்படும். நிலையத் தலைவர்கள் ஒவ்வொரு மாத இறுதியிலும் உபகாரச் சம்பளங்களை அம்மாணவர்களுக்கு வழங்குவார்கள். மேலும், அந்நிலையத் தலைவர்கள் மேற்படி மாணவர்களின் வேலை முற்போக்கு பற்றி நால் ஆண்டுக்கு ஒரு முறை அறிக்கை தயாரித்து இந்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் அதில் விதிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் தங்கள் வேலையில் திருப்திகரமான முற்போக்கைக் காட்டி வருவதைப் பொறுத்துத்தான் உபகாரச் சம்பளங்கள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும்.

## தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

| | ரூ. அ. பை. |
|---|---|
| முன்வரவு | 1115—11—0 |
| வித்வான் கா. சந்திரசேகரன் சிவஞானபுரம் | 2—0—0 |
| இ. காத்தான், நிலக்கோட்டை | 10—0—0 |
| கே. கண்ணன், புதுவை | 5—0—0 |
| ச. விசயராசன், அருப்புக்கோட்டை | 1—0—0 |
| ம. திபாகரராசன், வெள்ளினிப்பட்டி | 2—0—0 |
| தி. ச. குழந்தை வேலன், உறையூர் | 2—0—0 |
| " மாணவர் விடுதி " மாணவர்கள், கொடுமுடி | 5—0—0 |
| அ. சங்கரலிங்கம், மதுரை | 3—0—0 |
| எஸ். சீனிமுகம்மது, ,, | 2—0—0 |
| எம். குருசாமி. ,, | 2—0—0 |
| பெ. கோபால், ,, | 1—0—0 |
| ஜெம்புலிங்கம், ,, | 1—0—0 |
| அ. சி. கந்தசாமி, ,, | 1—0—0 |
| பா. ஜாபர் உசேன், பொள்ளாச்சி | 1—0—0 |
| பி. ஏ. நாச்சிமுத்து, பொள்ளாச்சி | 1—0—0 |
| ச. கந்தசாமி, ,, | 1—0—0 |
| கோ. கோபால், ,, | 1—0—0 |
| அ. ச. பாலு, ,, | 1—0—0 |
| எம். சாமியப்பன், கோவை | 10—0—0 |
| தி. சி. செங்கோடன், திருச்செங்கோடு | 2—0—0 |
| பி. சின்னப்பா, பெங்களூர் | 10—0—0 |
| | 1179—11—0 |

## புது டில்லியில்...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்து சட்ட திருத்த மசோதா ஒரு பெரிய புரட்சிகரமான சட்டமல்ல, சீர்திருத்தப் பாதையில் முதற் படிக்கட்டு அமைப்பு வேலையே அம்பேத்கார் மேற்கொண்டுள்ள பணி. இதற்கே இத்துணை எதிர்ப்பு என்றால், நம் முன் இருக்கும் மலையளவு சீர்திருத்தப் பணிகள் என்னவது என்பதை நினைக்கும்போது நெஞ்சு பதறுகிறது.

வேடமணிந்த ஆண்டிகளின் எதிர்ப்புக்கு அஞ்சி அரசியலார் தம் முயற்சியைக் கைவிட்டுவிடுவார்களா, அன்றி அஞ்சாது பணி புரிவார்களா என்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

சாதுக்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இந்து சட்டத் திருத்த மசோதா கைவிடப்படுமானால், அல்லது மாற்றங்களுக்குட்படுமானால், திருத்தங்கள் செய்வதன் மூலம் உருக்குலையச் செய்யப்படுமானால், இன்றைய ஆட்சிக்கு மதச்சார்பற்ற ஆட்சி என்ற பெயரே பொருந்தாது. அது மட்டுமல்ல, ஆண்டிகளின் எதிர்ப்பு கண்டு ஆட்சியாளர் அஞ்சுவரேல், அடுத்துச் சீர்திருத்தக்காரர்களின் எதிர்ப்பையும் அவர்கள் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்.

சாதுக்கள், சந்நியாசிகள், துறவிகள் எனப்படுவோர் அரசியலில் தலையிட்டு, ஒரு சீர்திருத்தச் சட்டத்துக்குக் குறுக்கே நிற்பது அடாத செயல், அயோக்கியத்தனம் என்றாலும் பொருந்தும்.

சாதுக்கள் எதிர்க்கிறார்கள். ஆம்; சாதுக்கள் இம்மாதிரி எதிர்ப்புகளைத் தவிர வேறு எந்த நற்பணியை அவர்கள் மேற்கொண்டார்கள்? எதற்குத்தான் அவர்கள் குறுக்கே நிற்காதிருந்தனர்? உடன்கட்டை ஏறுதல் கூடாது என்று சட்டம் செய்யப்பட்ட போதும் எதிர்த்தனர், ஆலயப் பிரவேசத்தை எதிர்த்தனர், தீண்டாமை ஒழிப்பு கூட கூடாத பணி! என்றனர். அவர்கள் செய்த ஆர்ப்பாட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்லவே. ஆனால் அத்தகைய அறிவிலிகளின் ஆர்ப்பாட்டங்களுக்கு அஞ்சி எடுத்த பணிகளை நிறுத்திவிடுவதென்ற நிலை தோன்றியிருக்குமானால், முன்னேற்றம் என்பதை நாம் கண்டிருக்க முடியுமா?

சாதுக்கள் சமுதாயத்துக்கு வெளியே, கானகத்திலே இருந்து கடவுளுடன் பேச வேண்டியவர்கள். அப்படிப் பட்டவர்கள் இந்து சட்ட திருத்த மசோதாபற்றி கவலை கொள்ள வேண்டிய அவசியமே இல்லை அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதில் நம்பிக்கை கொண்ட இந்த பக்தர்கள், அம்பேத்காரின் மசோதாவைக் கண்டு மருளுவானேன்?

எனவே, இந்து சட்டத் திருத்த மசோதாவைக் கண்டு முற்றுந் துறந்த இந்த முனிவர்கள் அஞ்சுவதில் அர்த்தமில்லை. அதுபோலவே, இப்படிப்பட்ட ஆண்டிகளின் எதிர்ப்பைக் கண்டு ஆட்சியாளரும் ஆயாசப்படத் தேவையில்லை. மலைஅடிவாரங்களில் மகேஸ்வரனை நோக்கித் தவங்கிடக்கும் துறவிகளை ஆட்சியாளர் கைதுசெய்து, காவலில் வைத்திருப்பது வரவேற்கத் தக்கதே. ஏனெனில் அந்த தபசிகளுக்கு எப்படியும் ஓர் தனியிடம் தேவை! அந்தத் தனியிடம் சிறைச்சாலையாக இருப்பது குறித்து அந்த சாதுக்களே சஞ்சலமடைய மாட்டார்கள், காவலில் இருக்கும் ஆண்டிகள் அங்கேயே இருக்கட்டும்; அம்பேத்காரின் மசோதா இனிது நிறைவேறி நாட்டுக்கு நலம் பயக்கட்டும். வைதிகம் ஒழியட்டும் சீர்திருத்தம் வளரட்டும்.

# "வீர மகளிர்"

["கோவல்கிழார்"—கல்லை]

வளமார் எமது திராவிடத்தில் வீரமகளிர் பலர் சங்ககால நூற்களில் காணப்படுகின்றனர். உண்மையிலேயே பல வீரப் பெண்டிர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வரலாறு மறைக்கப்படுகின்றது ஆனால், வடநாட்டு வனிதாமணிகளின் மேன்மை பற்றி இங்கு பேசப்படுகின்றது. தமிழனுக்குத் தன்மானமிருந்தால் இந்நிலை ஏற்படுமா? என்று தான் வீரத் தமிழன் தன்மான உணர்ச்சிப் பெறப் போகின்றனோ?

தன்மானமும், வீரமும், கற்பும், நற்பண்பும், நல்லொழுக்கமும், சந்தர்ப்பத்தில் ஆண்களையே எதிர்த்துப் போராடும் வல்லமையும் பெற்ற அரமகளிரை, அபலைபாக்கி, பேதையாக்கி, பெண்டிரைப் பேதமைமிக்கவள் என்று கூறி, அடுப்பங்கரை அலுவலன்றி அவர்களுக்கு வேறு அலுவல் இல்லாமல் செய்து, உணர்ச்சியற்ற ஓர் மணிதப் பிண்டமாக்கி வைத்துள்ளது சாத்திரம், சம்பிரதாயம். இவைகளை அறிவுள்ள ஆண்களும், ஆம்! என்று ஏற்றுக்கொண்டனர்.

இது மடமையின் சிகரம் என்று மாண்புள்ள மறத்தமிழன் ஒவ்வொருவனும் வெட்கத்தை விட்டு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் ஏற்றதைத் தவிர வேறுவழியில்லை இருக்கலாமா இந்நிலை? எண்ணிப் பாருங்கள்! ஏனமல்ல! கேலியுமல்ல! மனமறிந்த உண்மை!

நமக்கு வெறும் கட்டுக்கதைகள் போலத் தோன்றும் வீரச் செயல்களைப் பண்டைத் தமிழ் பெண்டிரினத்தில் காண்கின்றோம். தமிழ்த் தாய்மாரே தம் புதல்வரை வீரசெலங்களில் ஊக்கிவிட்டார்களென வரலாறு கூறுகின்றது பொன்முடியாரென்னும் பெண் புலவர்,தாய்,தந்தை, அரசன்,மகன் முதலியவர்களுக்குரிய கடமைகள் இன்னின்னவென்பதை கீழ்கண்ட பாடலில் கூறுகின்றார்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடைநல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாளருஞ் சமமுருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"
(புறம்)

இப்பாட்டு அக்காலத்து வீரத்தாயாது மனநிலையை நன்குணர்த்தும், மற்றொரு தாய், தன் மகன் போர்க்களத்தில் யானையை வீழ்த்தித் தானும் மடிந்தானென்னுஞ் செய்தி கேட்டு, தானவனைப் பெற்றபோது அடைந்த இன்பத்தைவிட அதிக மகிழ்ச்சியடைந்தாளென, பூங்கணுத்திரை என்னும் பெண் புலவர், "மீனுண் கொக்கின்றூவியன்ன ......வேதிரத்து," என்னும் பாடலில் கூறுகின்றார்.

மற்றொரு வீரத்தாயின் மாண்பு மிக்க வீரத்தினைப்பாருங்கள். முதல் நாள் போரில், தந்தை இறந்தான் அடுத்த நாள் கணவன் உயிர் துறந்தான். இன்னும் போர் முரசொலி கேட்டு தன் ஒரே மகனைத் தலைவாரி விட்டுவேல்லை கொடுத்து போர்க்களம் நோக்கி அனுப்புகின்றுள். இது வல்லவோ வீரம். அப்பாடல் இது.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிராதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற் கிவள்
தன்னை
யானை எறிந்து களத்து
ஒழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற் கிவள்
கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப்
பட்டனனே
இன்றும், செருப்பறைகேட்டு
விருப்புற்று மயங்கி
வேல்கை கொடுத்து வெளிது
விரித்து உடீஇ
பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி
ஒருமகனல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென
விடுமே"

இது ஒக்கூர்மா சாத்தியார் என்னும் பெண் புலவர் விளக்கும் புறநானூற்றுப் பாடல். மற்றொரு தாயின் செயலைப்பாருங்கள்:—

தன் மகன் போரில் புறமுதுகிட்டு ஓடினன். அப்போது எதிரிகள் தாக்கி சாகடித்தனர் என்று கேட்ட தாய், புறமுதுகிட்டு ஓடி மார்பில் அடி வாங்காது முதுகுப்புறத்தில் காயமேற்பட்டிருந்தால் அவனுக்குப் பால்கொடுத்த தனங்களை அறுத்தெறிவதாகக்கூறி, போர்க்களம் விரைந்து பிணக்குவியல்களைப் புரட்டித் தள்ளித் தன் மகன் உடலைக்கண்டெடுத்து, மார்பில் அடிப்பட்டு இறந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள் என்று பேசப்பட்டுள்ளது. இதுவன்றோ வீரத்தாயின் செயல். தற்போதுள்ள தாய்கள் என்றும் அங்கேயே ஒப்பாரி வைத்து விடுவார்கள் இது தாயின் செய்கையா? மற்று மகன் வீரனாக விளங்கவேண்டுமானால் தாய்தான் காரணம். தாய்ப்பாலூட்டும் போதும், உணவூட்டும் போதும் வீரத்தையும் ஊட்ட வேண்டும். இது வீர அறமகளிர் தலையாய கடன்.

சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி என்னும் வீர மாது, தன் கணவன் குற்றவாளியெனக் கருதி கொலை புரிந்த ஆரியப் படை தந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டியனை அணுகித் தன் கணவன் குற்றமற்றவனென்பதனை விளக்கி வெற்றிபெற்று தன் கற்பின் மேன்மையையும் காட்டினள் என்று அறிகின்றோம். நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் தான் குற்றவாளி என ஒப்புக்கொண்டு சிம்மாசனத்திலேயே உயிர்துறந்தான். உடனே அவன் மனைவி பெருங்கோப்பெண்டும் உயிர்துறந்தாள் என்பது வரலாறு. பெருங்கோப்பெண்டும் ஓர் தலைசிறந்த கற்பினள், வீர அறமகள்!

ஞாபதுமன் போரில் அழிவுற்ற செய்தி கேட்டவுடன் உயிர் துறந்த பதுமகோமளையும் ஓர் கற்பின் அணிகலம். வீர மகள்! மதுரையை அரசு புரிந்த வீர மங்கை மங்கம்மாள் ஓர் வீர மகள் இப்படிப் பல அரசிளங்குமரிகளுமுண்டு. கற்புக்கு எடுத்துக்காட்டாக, மாதவி, மணிமேகலை. இவைகளிலுள்ள போன்ற வீரமகளிரை மற்றத் தாய்மார்களும் பின்பற்ற வேண்டுகின்றேன்.

வாழ்க வீரமகளிர்!
தழைக்க வீரமகளிர்!!

## அடக்குமுறை பாணம்!

"கோட்சே கூட்டப்" என்ற நூலை அச்சிட்ட தற்காக தூத்துக்குடி 'நாடார் பிரஸ்' சொந்தக்காரரை ரூபாய் 1000 ஜாமீன் தொகையாகக் கட்டச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறது சென்னை அரசாங்கம். அடக்குமுறை வேட்டைத் தொடர்ச்சியில் இதுவும் ஒன்று!

## சென்னைத் தமிழாசிரியர் சமூகம்

சென்னை, ஏப் 19—
இச்சமூகச் சார்பில் 17-4-50 மாலை உறுப்பினர் பொதுக் கூட்டமொன்று சென்னை, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. கூட்டத்திற்குக் கல்லூரிப் பேராசிரியர்களும், சென்னையிலுள்ள உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களும் வந்திருந்தனர். கூட்டத்திற்குக் கழகத் தலைவர் புலவர் தோழர் சுவில் சிவமுத்து அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் மொழி ஆக்கம் குறித்துத் தோழர்கள் பேராசிரியர் அ. சிதம்பரநாதனார், புலவர் ப. சு. கண்ணப்ப முதலியார். பேராசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியார், புலவர் கோ. கில்லைநாதன் ஆகியோர் பேசினர்.

பல புலவர்கள் தங்கள் கருத்துக்களைக் கடிதங்கள் வாயிலாக அறிவித்தனர். அவை கூட்டத்தில் படிக்கப்பட்டன.

முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின. முதல் மொழிக்குரிய இடத்தில், தாய்மொழி ஒன்றே கட்டாயமாக இருத்தல் வேண்டும். முதல் மொழிக்குக்காலம் குறைந்தது 6 பகுதிகள் (Periods) அவசியம் வேண்டும் இத்தன் வகுப்பிற்குரிய பாடத்திட்டத்தில், தற்காலத்திற்கு வேண்டிய வகையில் விஞ்ஞானம், உலக சரிதம், இலக்கணம் முதலியன அமைத்தல் வேண்டும். தமிழ்மொழி சம்பந்தமாகச் செய்யும் திருத்தங்கள் முதலியவற்றை, தமிழாசிரியர் சமூகத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

இவைகளைக் குறித்து ஆலோசிப்பதற்கு ஓர் மாநாடு மாதத்தில் சென்னையில் கூட்ட ஏற்பாடு செய்தல் வேண்டும். பின்னர் நன்றிகூறலுடன் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

## திருட்டுக் கஞ்சா கடைகள்

### சிங்கப்பூரில் 1000-க்கு மேல் உள்ளன

சிங்கப்பூர், ஏப். 22—
சிங்கப்பூரில் 1000 க்கு மேற்பட்ட ரகசிய கஞ்சா அடிக்கும் இடங்கள் இருப்பதாகவும், இதற்கு வாடிக்கைக்காரர்கள் ஏற்படுத்தி வரும்படி செய்ய ஆழகிகள் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த அழகிகளுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ. 4—8—0 அல்லது ரூ. 6—4—0 வீதம் சம்பளம் கொடுக்கப்படுகிறதாம். இந்த ரகசிய இடங்களைக் கண்டுபிடிப்பதில் அதிகாரிகள் தீவிரமாக முனைந்திருக்கின்றனர்.

## ஜார்டன் இறக்குமதிகளை குறைக்கிறது

அம்மான், ஏப். 22—
ஜார்டன் சர்க்கார் இறக்குமதிகளை ரூ. 39,000,060க்கு குறைக்க முடிவு செய்திருக்கிறது. இறக்குமதி லைசென்ஸ் முறையை மீண்டும் ஆரம்பிப்பது என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பிரிட்டிஷ் நிதி நிபுணர்கள் நிலைமையை நன்கு அறிந்த வெளியிட்ட சிபார்சுகளின் பேரிலேயே இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

## சிந்தியடா தமிழா!

[நல்லை—அ. இளங்கோவன்]

(1) பிறந்ததன் நாட்டினிலே—இருந்து
பிழைத்திட வழியின்றிப்
பறந்தயல் நாடுகளில்—சென்று
பாடுகள் படுகின்றாய்!
பிறந்தவன் உனக்கின்றி—வந்து
பெருகுவோர்க் குரிமையெலாம்
செறிந்திட நீவறண்டு—வாழ்வதைச்
சிந்தியடாதமிழா!

(2) மண்ணையும் பொன்னாக்கி—நல்ல
வளமெல்லாம் சேர்ப்பதற்குத்
திண்ணிய உடலுண்டு—முறையிற்
செய்திட மூளையுண்டு!
எண்ணிய தொருநல்ல—தொழிலை
இயற்றிநல் லின்பமுறும்
கண்ணியம் உனக்கின்றி—வாழ்வதைக்
கருதிடடாதமிழா!

(3) கலையெலாம் கற்றுயர்ந்து—பெருங்
கலைஞனாய்ச் சிறந்திடவும்
நிலைபெறும் திறனுண்டு—நிலைத்து
நிற்குநல் லறிவுமுண்டு!
நலமொன்று மில்லாத—வாழ்வில்
நலிந்துநீ கலையுணர்ச்சி
இலையென மிழிவுடனே—வாழ்வதை
எண்ணிடடா தமிழா!

(4) தாய்மொழித் தலைமையிலை—தனித்
தமிழ்க்கலைப் புலமையிலை
தாய்நாட்டுரிமையிலை—தமிழ்த்
தகைமையும் பண்புமிலை
வாய்மொழி எழுத்துரிமை—எல்லாம்
வளர்த்திட வகையில்லை!
நீயொரு மிருகம்போல்—வாழ்வதை
நினைத்திடடாதமிழா!

## மதிப்புரை

### கொலைகாரி

[ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி. வெளியீட்டோர்: திராவிடப் பதிப்பகம் சேலம். (N. A) விலை அணா 12]

விதவை என்ற பெயர் சூட்டி, இளம் பெண்டிரை சமுதாய கொடுமைக்குள்ளாக்குவதால் விளையும் கேடுகள், ஏழ்மையில் உழலும் எழிலரசிகள் பலர் செல்வச் செருக்குமிக்க ஆடவரால் அலைக்கழிக்கப்படும் கொடுமை, பாட்டாளி—பணக்காரன் வேற்றுமையின் விளைவுகள் முதலியன இதன்கண் விளக்கப்படுகின்றன. விறுவிறுப்பான நடையில் தீட்டப்பட்டுள்ள நல்லதோர் சமுதாய சித்திரம்.

* * *

### தோழமையா? விரோதமா?

[ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை. வெளியீட்டோர்: மறுமலர்ச்சி வெளியீடு. 18, ஆபிரகாம் முத்தையா முதலி தெரு, சென்னை-1. விலை: அணா 4]

சென்னையில் ஜனவரி 22, 23-ல் நடைபெற்ற திராவிடமுன்னேற்றக் கழக மாநாட்டில் தோழர் அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பே இச்சிறு வெளியீடு. தமிழரின் தனிப் பண்பு, இன்ப திராவிடத்தின் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. படித்தோர்க்க வேண்டிய இன்றியமையாத வெளியீடு. இவ் வெளியீட்டை நல்ல முறையில் தொகுத்துத் தமிழகத்துக்குத் தந்த மறுமலர்ச்சி வெளியீட்டகத்தாரின் முயற்சி பாராட்டத்தக்கதே.

* * *

### அண்ணாவின் அறைகூவல்

[ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ. தொகுப்பாளர்: புதுவைக் கண்ணன், வெளியீட்டோர்: முன்னேற்றப் பண்ணை 2/122 பிராட்வே சென்னை விலை அணா 3]

இது 1949-ல் மே திங்கள் தோழர் அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பு. முதலாளித்துவக் கொடுமை, தொழிலாளரின் துயரம், ஆட்சியாளரின் கெடுபிடிகள் இதன்கண் விளக்கப்படுகின்றது. உண்மையிலேயே, ஆதிக்க வர்க்கத்துக்கு இஃதோர் அறைகூவலே. படித்தாக வேண்டிய நூல்.

* * *

### உதயசங்கரன்

[ஆசிரியர்:- என். ராசைம்பிரமணியம்; வெளியீட்டோர்:- 'நவீனம்' பதிப்பகம் சென்னை-7 விலை: ரூ. 2]

அவர் தொட்டார்; அந்தக் கொடி துவண்டது.

தொட்டவர் உல்லாச உலகிலே சஞ்சரிக்கும் ஜமீன்தார் உதயசங்கர முதலியார். துவண்ட கொடி அடிமை வாழ்வில் உழலும் அழகி பானுமதி. காலம் வளர்ந்தது; பானுமதியின் கர்ப்பத்திலிசுவும் வளர்ந்தது. உதயசங்கர் என்னும் இந்த உல்லாச வண்டு வேறாமி என்னும் மோர் சினிமா மலரைத் தேடிப் பறந்தது! பானுமதி கைவிடப்பட்டாள்!

பானுமதி பட்டபாடுகள் சொல்லத்தரமல்ல. வாழ்க்கைச் சுழலில் சிக்கிச்சிதறிச் சிறைச்சாலையையும் அடைகிறாள். பின்னர் காலம் மாறுகிறது. உதயசங்கரின் மனத்திலும் பச்சாதாபமேற்படுகிறது. மணமுடிகிறது. பிரிந்தவர் கூடுகின்றனர் இதுதான் கதையின் சாரம். கதைப்போக்கிலே செல்வச் செருக்கு, ஜாதி இறுமாப்பு, அரசியல், சீர்திருத்தம் முதலியன விளக்கப்படுகிறது. கதையின் முற்பகுதியில் தேசியம் சற்று அதிகமாக இடம் பெற்றுள்ளது. பிற்பகுதியில் சீர்திருத்தக் கருத்துகள் காணப்படுகின்றன. இதிலிருந்து இக்தாசிரியர் 'மாஜி' தேசீயவாதி எனத் தெரிகிறது! படிக்க வேண்டிய கதைதான். படித்துப்பாருங்கள்.

# அன்பளிப்பு எங்கே?

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

**தலைமைக் காரியாலயம்!** உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறாது என்று அனைவரும் கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

**குறைபட்ட தோழர்களே!**
**வற்புறுத்திய நண்பர்களே!**
**ஆர்வம்காட்டிய அன்பர்களே!**
**யோசனை கூறிய தோழர்களே!**

## உங்கள் அன்பளிப்பு எங்கே?

## அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

# ஜாதியென்னும் கொடிய வாள்!

(ஃ)

## காதலர் உயிர் குடித்துவிட்டது

பைஜாபாத், ஏப்.— காதல் கொண்டும் கல்யாணம் செய்துகொள்ள முடியாதுபோன அக்கிரமத்தால் இரு இளங் காதலர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று அயோத்தியிலிருந்து இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

இவ்விரு காதலர்களும் ஒருவர் மீது மற்றொருவர் அடங்கா காதல் கொண்டிருந்தனர். இருவரும் சேர்ந்து சதிபதிகளாக இல்வாழ்க்கையை நடத்துவதற்கு ஜாதி என்னு கொடியவாள் குறுக்கே நின்றுவிட்டது. இதனால் வாழ்க்கையில்வெறுப்புகொண்டுவிட்ட அப்பெண் கிணற்றில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். தனது அருமைகாதலி மாண்டு போனாள் என்ற செய்தியைக்கேட்ட வாலிபன் அதிவேகமாக போய் கொண்டிருந்த ஒரு ரயிலுக்கு குறுக்கே விழுந்து மாண்டான்.

## காச நோய் தடுப்பு

### அமிர்தகௌரி ஆலோசனை

புதுவில்லி, ஏப். 20— இந்திய க்ஷயரோக தடுப்பு சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம், இன்று டில்லி சர்க்கார் மாளிகையில் சுகாதார மந்திரி தோழியர் ராஜ்குமாரி அமிர்தகௌரி தலைமையில் நடைபெற்றது.

க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் அதிகமாக வேண்டும் என்றும், பயிற்சி பெற்ற டாக்டர்கள் அதிகமாக வேண்டும் என்றும் சுகாதார மந்திரி வற்புறுத்தினார். இவ்விஷயத்தில் இந்தியாவின் தேவைப் பூர்த்தியாக பல வருஷங்கள் ஆகுமென்றும், அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

**பணக்காரர்கள் முன் வருக**

அமிர்தகௌரி மேலும் பேசியதாவது:— க்ஷயரோக தடுப்பு சம்பந்தமாக நமது நாட்டில் வசதிகள் ரொம்பவும் குறைவு. போதிய வசதி செய்துதர முடியாமல் இருப்பதற்கு சர்க்கார் வருந்துகின்றனர். போதிய நிதி வசதி இல்லாமல் இருக்கிறது. பெரிய பணக்காரர்களும், டாக்டர்களும், இவ்விஷயமாக முன் வந்து ஆவன செய்ய வேண்டும்.

டாக்டர்கள் மட்டுமல்லாமல், சமூக சேவை ஸ்தாபனங்களும் இவ்விஷயத்தில் அக்கறை காட்ட வேண்டும். க்ஷய தடுப்பு முறைகள் பற்றி மக்களிடையே தக்க பிரசாரம் செய்ய வேண்டும். இப்படி சேவைக்கு முன்வருபவர்களை சர்க்கார் செலவில்பயிற்றுவிக்குமாறு, மாகாணங்களுக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

க்ஷய தடுப்பு வேலைகளுக்கு அதிகப் பணம் தேவை. இதுபற்றி ஆலோசிக்க க்ஷயதடுப்பு சங்கக் காரியதரிசிகள் மாநாடு ஒன்று கூட்டப்படும்.

## ஓடும் இரயிலில் கல்லெறிந்த சிறுவர்கள்

கோவில்பட்டி, ஏப். 18— கோவில்பட்டிக்கும் சாலைப்புதூருக்கும் இடையே ஓடிக்கொண்டிருந்த திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் 14—12—49 கல்லை வீசினதாக சீனு, மாரியப்பன், புதுவைவன் என்ற மூன்று சிறுவர்கள் மீது ரயில்வே போலீசார் தொடர்ந்த வழக்கில் கோவில்பட்டி சப்-மாஜிஸ்ட்ரேட் தோழர் கோபாலகிருஷ்ணன் 15-ந் தேதி எதிரிகளை திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டுக்கு மேல் விசாரணைக்கு கமிட்டி செய்தார்.

## தென்குரல்

நாகர்கோவில், ஏப். 18— "தென்குரல்" என்னும் தமிழ் வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் தோழர் ஏ. குஞ்ஞன் திருவனந்தபுரம் ஜில்லா மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தமது ஸ்டேட்மெண்டை பதிவு செய்து கொண்டார். தோழர் சி. குழந்தைசாமியை துணை ஆசிரியராகக் கொண்டு 1950 மே முதல் வெளிவரும் என்று அறிவிக்கப்படுகின்றது.

## இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

### தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

முத்துப்பேட்டை
மேலூர்
அம்பில்
காஞ்சீபுரம்
கோவை 9—வது வட்டம்

**மற்றைய கழகங்கள்**

வடசேரி (வ. உ. சி. இ. கழகம்)
கிருஷ்ணன் கோயில் (பு. தே. வா. சங்கம்)
துங்காவி
கூடலூர் பழையபட்டினம்
கிருஷ்ணகிரி

★

**இதுவரை தீர்மானம் அனுப்பியுள்ள மொத்தக் கழகங்கள்**

# 183

## வில்லுப்பாட்டு வைர விழா

நாகர்கோவில், ஏப். 19— கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களது 'வில்லுப்பாட்டு வைர விழா' நாகர்கோவில் எஸ். எல். பி. மைதானத்தில் தமிழ்க் கலைக் கழகத்தின் சார்பில் 18—4—50 அன்று நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், புளிமூட்டை ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர். 75,000 பேருக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். தோழர்கள் மன்னத்து பத்மநாபப்பிள்ளை, சங்கர் மற்றும் முக்கிய உள்ளூர் பிரமுகர்களும், விழாவில் கலந்துகொண்டனர். கூட்டத்தினர் அமைதியாக இருந்து விழாவினைச் சிறப்பித்தனர். விழாவில், கலைக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மற்றைய கழகங்களின் சார்பில், கலைவாணருக்கு வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டது.

தோழர் என். எஸ். கிருஷ்ணன் நன்றி செலுத்தினார்.

## இந்திய ஜனத்தொகை

### 35 கோடியாகும்

புதுடில்லி, ஏப். 20— 1950-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தேதி இந்தியாவின் ஜனத்தொகை 34 கோடியே 73 லட்சத்து 40 ஆயிரமென்று சென்சஸ் கமிஷனர் அறிவிக்கிறார். வருடமொன்றுக்கு 31 லட்சத்து 90 ஆயிரம் அதிகரிக்கிறது.

இந்த எண்ணிக்கை கூடியவரையில் சரியென்று கூறப்படுகிறது.

## புதிய கல்லூரிகள் அமைப்பு

சென்னை, ஏப். 22— இரண்டு புதிய நடுத்தரக் கல்லூரிகள்-ஒன்று வட சென்னையில் (தியாகராயர்கல்லூரி) மற்றொன்று காஞ்சிபுரத்தில் (பச்சையப்பன் கல்லூரி) இவ்வாண்டு புதியதாக ஆரம்பிக்கப்படும். மற்றும் ஐந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மாகாணத்தில் ஆரம்பிக்கவும் சென்னை பல்கலைக்கழகக் குழு அனுமதியளித்திருக்கிறது.

தியாகராயர் கல்லூரியில் 280 மாணவர்களும், காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரியில் 100 மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பயிற்சிக் கல்லூரிகள் காரைக்குடி, பாளையங்கோட்டை, பாலக்காடு, மங்களூர், பெரியநாயக்கன் பாளையம் (கோவை ஜில்லா) என்னும் இடங்களில் வைக்கப்படும். சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை 280 ஆக இருக்கும்.

## மேல் வங்கத்தில் தொழில் கமிஷனர்

### ஒரு பெண் நியமிக்கப்பட்டார்

புதுடில்லி, ஏப். 22— மேற்கு வங்கத்தில் தொழில் கமிஷனர் பதவிக்கு, தோழியர் பி. ஏ. ராயாய் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அஸ்ஸாம் ஒரிஸா தொழில் கமிஷனராகவும் இவரே இருந்து வருவார். இவருடைய தலைமைக் காரியாலயம் கல்கத்தாவில் இருந்துவரும்.

இவர் மத்யசர்க்கார் தொழில் மந்திரி காரியாலயத்தில் தொழிலாளர் நலன் ஆலோசகராக இருந்து வந்தார்.

தொழில் தகராறுகள், தொழிலாளர் நலன் முதலியவைகளை இவர் கவனித்து வருவார். துறைமுகம், ரயில்வே, சுரங்கம் முதலிய இடங்களில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் சரியாக அமுல் நடத்தப்படுகின்றதா என்பதை இவர் கவனித்து வருவார்.

இப்பதவிக்கு ஒரு பெண் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவை.

## சீர்திருத்தத் திருமணம்

வேலூர், ஏப். 18— 6—4—50 அன்று தோழர் பி. ஏ. இலக்ஷ்மணனுக்கும், தோழியர் அஞ்சலிக்கும் தோழர் மூர்த்தி தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் அவர்கள் "திருமணம்" என்ற பொருள் பற்றிப் பேசினார். மணமக்களுக்குப் பரிசுகளும், வாழ்த்துகளும் வழங்கப்பட்டன.

# பொழுதுபோக்கு

**தமிழ்**

| | |
|---|---|
| சாகர் | — மருதநாட்டு இளவரசி |
| சயானி | — ” |
| பிரபாத் | — விஜயகுமாரி |
| கெயிட்டி | — ” |
| சரஸ்வதி | — ரத்னகுமார் |
| திருமகள்(சைதை) | ராமராஜ்யம் |
| மகாராணி | — வாழ்க்கை |
| பாரகன் | — ” |
| வீனஸ் | — ” |
| கமலா | — கிருஷ்ணவிஜயம் |
| பிரைட்டன் | — நல்லதம்பி |

**தெலுங்கு**

| | |
|---|---|
| பிராட்வே | — குணசுந்தரி |
| வெலிங்டன் | — ” |
| சன் | — ” |
| கிரௌன் | — சௌகார் |
| லட்சுமி | — ” |
| சித்ரா | — ” |

**மலையாளம்**

| | |
|---|---|
| ஸ்டார் | — நல்லதங்காள் |

**ஆங்கிலம்**

| | |
|---|---|
| Casino | — Sinbad the Sailor |
| Minerva | — Free for All |
| Midland | — Any Number Can Play |
| New Globe | — Lust for Cold |
| New Elephinstone | — The Heiress |
| Kinemacentral | — Festival of Youth |

**ஹிந்தி**

| | |
|---|---|
| அசோக் | — [illegible] |
| செலக்ட் | — ஷப்னம் |

# இனி நடப்பவை

வாலாஜாநாகர் :— திருக்குறள் பிரசாரம், தோழர்கள் தங்கசாமி பி. ஏ., புலவர் ஆ. மணிமொழியன், மாணவமணி பி. ஏ. (ஆனர்ஸ்) இளங்குப்பனார் ஆகியோரைக்கொண்ட பிரசாரக் குழுவினர் ஏப்ரல் 23 நாய்க்கன்பாளையம், 24 திமிரி, 26 ஆட்டியம், 27 கலவை, 28 கரை, இராணிப்பேட்டை, மே 1 சாத்தம்பாக்கம், மே 2 சக்கரமல்லூர் ஆகியவைகளில் திருக்குறள் சொற்பொழி ஆற்றுவார்கள். வாலாஜா தாலுகாவைச் சேர்ந்த மற்ற தோழர்களும் திருக்குறள் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்யுமாறு பிரசாரக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

* * *

சென்னை:—23-4-50 காலை 10-மணிக்கு சென்னை 13 வது வட்ட தி. மு. கழக கிளை அமைப்புக் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது நிறுத்தப்பட்டுவிட்டது எனத் தோழர் ராமலிங்கம் அறிவிக்கிறார்.

* * *

கிருஷ்ணகிரி :— தி. மு. கழக செயற்குழு அவசரக் கூட்டம் 24 4-50 அன்று மாலை 6-30 மணிக்கு தோழர் அன்வர்கமால் இல்லத்தில் நடைபெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாமல் வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

* * *

சென்னை, தேனாம்பேட்டை:— சம்பிரமல் மைதானத்தில் நாடகக் கழகத்தின் சார்பில் 'சரச' என்னும் சமூக நாடகம் 23—4—50 அன்று மாலை நடைபெறும்.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**25 - 4 - 50**

நஞ்சத்தலையூர் : சி. பி. சிற்றரசு.

**1 - 5 - 50**

**மே தினக் கூட்டங்கள்**

சென்னை :—சி. என். அண்ணாதுரை
மதுரை :—அ. சித்தையன்
கோவை :—இரா. நெடுஞ்செழியன்

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.